# The Devotional Path that the Role of Kugan in Kambaramayana Reveals

**Dr. M. Vijaya Sobha**
*Assistant Professor, Tamil Research Centre*
*S.T. Hindu College, Nagercoil*

**Abstract**
*Literature is the open book of life . In this literature, Love becomes important for man. Love is given by God. Being a slave to God,being taken as a refuge and being saved by his grace, is the path to your salvation. That is the reason for the greatness of life , the devotion of Kugan in The Kugapatalam, the devotion that does not consider material gain ,benefit or position , but loves Rama wholeheartedly and serves him. Kugan's devotion is considered a symbol of equality and trust. This research paper is a collection of essays that revels Kugan's love,devotion,bravery and morality.*

***Keywords:*** *Devotion, Senses, Honey, Fish, Virtue, Heroism, Friendship, Exchange*

**References**
1. Sivasubramanian, Tirukkural Thelivurai commercial publication thiruthangal, sivakasi626130
2. Balasubramanian , K.V puranaanooru , New century Book House (p) LTD , 2004
3. Kambaramayanam (Ayothiya kaandam pakuthi 2) Anna University 2010 second edition.

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17256006

# கம்பராமாயணத்தில் "குகன் பாத்திரம் உணர்த்தும் பக்திநெறி"

***முனைவர் மோ. விஜயசோபா***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வு சுருக்கம்***
*வாழ்க்கையின் திறந்த புத்தகமே இலக்கியம். இவ்விலக்கியத்துள் மனிதனுக்கு அன்பு முக்கியமாகிறது. அன்பினை இறைவன் மேல் சார்த்திக் கூறும் போது பக்திநெறிஆகிறது. இறைவனுக்கு அடிமையாய் வசப்பட்டு தஞ்சமாக போற்றி அருளால் உய்வடைதலே உன்னத நெறியாகும். அதுவே வாழ்வியல் பேறாகும். கம்பராமாயணத்தில் குகப்படலத்தில் குகனின் பக்தி கைம்மாறு கருதாத பக்திபொருள், பலன், பதவிஎதற்காகவும் இராமனை நேசிக்கவில்லை மனமார்ந்த அன்பும், சேவை உணர்ச்சியுமே காரணம். குகனது பக்தி உணர்வு சமத்துவம் மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக கருதப்படுகிறது. குகனது அன்பு, பக்தி, வீரம் பண்பாட்டு நெறியை வெளிகொணரும் பொருட்டுஇவ்வாய்வுகட்டுரை அமைகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *பக்தி, புலன்கள், தேன், மீன், பண்பாடு வீரம் நட்பு கைம்மாறு*

**முன்னுரை**

இலக்கியம் வாழ்வை பிரதிபலிக்கும் கண்ணாடி ஆகும். மண்ணில் நல்ல வண்ணம் ஒரு மனிதன் மனிதனாக வாழ்வதற்கு இலக்கியம் துணைநிற்கும். ஒரு இலக்கியத்தின் சிறப்பு அதன் நல்ல குறிக்கோளைக் கொண்டே இன்று காணப்படும் இக்குறிக்கோள் இலக்கிய மாந்தர்கள் வழியும் அவர் தம் செயலிலும் இலக்கியத்தில் வெளிப்படும் மனிதனின் நல்லொழுக்கலாற்றுக்கு குகன் என்ற பாத்திரப்படைப்பு இராமன் மீது கொண்ட பக்தியின் தனித்தன்மையும் அன்பும் வீரமும் கைம்மாறு கருதாத தொண்டும் கம்பராமாயண குகபடலத்தில் வெளிப்படுவதை காணலாம். அப்படிப்பட்ட குகனின் பக்தியின் உன்னத நிலையை விளக்கும் வகையில் ஆய்வு அமைகிறது.

**பக்தி – விளக்கம்**

**அன்பு – பக்தி**

உள்ளத்தின் தூய்மைதான் உண்மையான பக்தி மனிதன் தன் புலன்களை அடக்கி ஒரு நிலைப்படுத்தி அதன் வழி ஆன்மாவை ஒரு நிலைப்படுத்துவதாகும் பக்தி என்பது அன்பு அர்ப்பணிப்பு இறைவன் மீது ஆழ்ந்த நம்பிக்கை என்பதாகும். மனம். சொல செயல் மூலமாக இறைவனை போற்றி துதிப்பது பக்தி வாழ்க்கையை நீதியுடன் நடத்த வழிகாட்டும். குகன் இராமனை பார்த்தவுடன் அவனை இறைவனாக உணர்ந்து சேவை செய்கிறான்.

**குகப்படலம்**

கம்பர் இயற்றிய கம்பராமாயணம் ஆறு காண்டங்களையுடையது. அவை பாலகாண்டம் அயோத்தியா காண்டம் ஆரணிய காண்டம் கிட்கிந்தா காண்டம் சுந்தர காண்டம் யுத்த காண்டம் என்பனவாகும். அயோத்தியா காண்டத்தில் குகப்படலம் அமைந்துள்ளது. அயோத்தியைவிட்டு வனவாசம் செல்ல நீங்கிய இராமன் முதலியோர் கங்கையை கடந்துசெல்ல கரையில் தவச்சாலையை அமைத்துத் தங்கியிருந்த வேளையில் குகனை சந்திக்கும் நிகழ்வே குகப்படலம் ஆகும்.

**குகனின் பக்தி**

கங்கைத் துறையில் படகு செலுத்தும் எண்ணற்ற ஓடங்களுக்கு தலைவன்.

சிருங்கிபேரம் என்ற நகரில் தான் வேடர் குலத்தின் தலைவனாக இருக்கும் குகன் இராமனிடம் கொண்ட பக்தி நிஷ்காமபக்தி (பலன் எதிர்பாராத பக்தி) அன்பு அர்ப்பணிப்பு சுயநலம் இல்லாத பக்தி ஆகும். இராமனை சிருங்கேரி மடத்தில் குகன் கண்டவுடன் உணர்ச்சி புர்வமாக

**"தேவா நின் கழல் சேவிக்க வந்தனென்**
**நாவாய் வேட்டுவன் நாய் அடியேன் என்றான்"**

***(கம்ப. அயோத்தியா காண்டம்***
***கங்கைப் படலம் பா. 2053)***

கம்பர் தனது வரிகளில் குகன் வாயிலாக இறையுணர்வினை வெளிப்படுத்துகின்றார். தான் வேடர் குல தலைவனாக இருந்த போதும் எந்தவித செருக்கு சிறுதுமின்றி பணிவுடன் பதில் தருவதில்

**"எல்லாருக்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து"**

***(குறள் 125)***

என்ற வள்ளுவர் கூற்றுக்கேற்ப அடக்கமாகிய பண்பின் பிறப்பிடமாக குகன் திகழ்வதையும் காணலாம்.

### குகனின் விருந்தோம்பல் நெறி

தமிழரின் தலைசிறந்த பண்பு விருந்தோம்பல் ஆகும். தம் இல்லம் நோக்கி வந்தவரை மனமும் முகமும், மலரும் படியாக உபசரிக்க வேண்டும் அவ்வாறு நாம் உபசரிக்க தவறினால் "அனிச்சமலர்" போன்று அவர்கள் மனம் வாடி விடும்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**

***(குறள் 90)***

என்கிறது வள்ளுவம். அதன்படி குகனும் இராமனுக்கு தேனும் மீனும் ஆகிய கையுறை பொருட்களை அன்புள்ளத்தோடு காணிக்கையாக்கினான் அதனையே கம்பர் தன் கவி மிகு நயத்தால்

**"இருத்தி நீசுசு என்னலோடும் இருந்திலன் எல்லை நீத்த**
**அருந்தியன "தேனும் மீனும் அமுதினுக்கு அமைந்த ஆகத்**
**திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம்"? என்ன வீரன்**
**விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான்.**

***(அயோத்தியா காண்டம்: குகப்படலம்***
***பாடல் எண் 20)***

உடனே ராமன்

**"அரிய தாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்**
**தெரிதரக் கொணர்ந்த என்றால் அமுதினும் சீர்த்த! அன்றே**
**பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம் எம் அனோர்க்கும்**
**உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ! என்றான்.**

***(அயோத்தியா காண்டம்***
***குக படலம் பாடல் எண் 15)***

குகன் அன்பினால் கொண்டு வந்த பொருட்கள் "அமுதத்தை விட சிறந்தது" என்று இராமன் கூறிய சொற்களால் குகன் அகம் மகிழ்ந்தான். தகடூரை தலைநகரமாக ஆண்டு வந்த அதியமானும் தனக்கு அரிதாக கிடைத்த நெல்லிக்கனியை தான் உண்ணாது அன்போடு ஔவைக்கு கொடுத்து மகிழ்ந்தான். மேலும் அந்நெல்லிக்கனியை உண்டால் நீண்டநாள் உயிர் வாழலாம் என்று தெரிந்தும் புலவர்களுக்கு பெருந்தன்மையோடு வாரி வழங்கிய வள்ளலாக அதியமான் திகழ்ந்தான். அதனையே

**"நீலமணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும நீயே**
**தொன்னிலைப் பெருமலை விடரகத்து**
**அருமிசை கொண்ட சிறியிலை**
**நெல்லித்தீங்கனி குறியாது சாதல்**
**நிங்க எமக்கு ஈர்த்தனையே"**

***(புறம்பாடல் 91 – 6 முதல் 11 வரிகள்)***

என்ற புறநானூற்று பாடல் விளக்குவதை காணலாம்.

**குகனின் பண்பாட்டு மதிப்பு**

குகன் இராமனை தவக்கோலத்தில் கண்டவுடன்

**"பார்குலாம் செல்வ! நின்ன இங்ஙனம்**
**பார்த்த கண்ணை ஈர்க்கிலாக்**
**கள்வனேன் யான் இன்னலின் இருக்கை**
**நோக்கி தீர்கிலேன்**
**அனது ஐய! செய்குவென் அடிமை என்றான்".**

***(அயோத்தியா காண்டம் கங்கைப் படலம் பா.எ:2059)***

இராமன் நாடுவிட்டு காடு வந்த செய்தியறிந்து வருந்தும் குகனின் மன வருத்தமும் இராமனோடு உடன் சென்று உரிய உதவிகள் செய்ய துடிப்பதில் அவனது பேரன்பு நன்கு சிறக்கக் காண்கிறோம். இராமனுடன் காடு செல்ல கூறும் காரணம் உதவி என்ற உயர்ந்த பண்புடன் அன்பு எனும் மதிப்பின் உறைவிடமாக குகனை இனங்காட்டுகிறது.

**குகனின் வீரப்பண்பு**

இராமனைக் கானகத்தில் சந்தித்து மீண்டும் அழைத்துச் செல்ல பரதன் வருகின்றான் அவனோடு சேனைப் படையும் உடன் வருகின்றது கங்கையாற்றின் பகுதியிலிருந்து குகனைக் கண்ட உடன் இராமனைக் காட்டிலும் இருக்க விடாது துரத்த வருகிறானா பரதன் என்ற ஐயம் எழுகிறது. எனவே தன்னை கடந்து அவன் பின்னர் எம் பெருமானிடம் செல்லட்டும் என எண்ணித் தம் வீரர்களுக்கு இடும் கட்டளையில் குகனின் வீரப்பண்பு வெளிப்படுகிறது. போர் செய்ய புகுந்தால் இப்படையல்ல எத்தகு படையும் அழிந்து விடும் எனக் குறிப்பிடுவது வீரம் பேரன்பு ஆகிய உயர் மதிப்புகளுக்கு சான்று பகரும் என்றால் அனைத்து நிலைகளிலும் போற்றதக்க ஒழுக்கமாகிய மதிப்புக்கு சொந்தகாரனாக குகன் தென்படுகின்றான்.

**குகனின் நட்பின் பெருந்தன்மை**

இராமனை கங்கைக் கரையில் காணும் முன்பே குகன் மனதினால் நினைத்திருந்தான். ஒருமுறையாவது தனது வாழ்வில் இராமனை நேரில் கண்டு சந்தித்து விட வேண்டும் என்ற ஆவல் இருந்தது. உணர்ச்சி காரணமாக பிசிராந்தையாரிடம் நட்பு கொண்டிருந்த கோப்பெருஞ்சோழனை சான்றோர்கள் சோழன் துன்புற்றகாலத்தில் எள்ளி நகையாடினார்கள். ஆனால் சோழனோ "என் உயிர் தோழன்" எம்மிடத்தில் செல்வம் உள்ள போது வாராமல் நிற்பினும் துன்பத்தில் என்னை வந்து சந்திக்காமல் இருக்கமாட்டான் என்று பதிலடி கொடுத்த பாடல்

**"தென்னன் பொருப்பன் நன்னாட்டு**
**உள்ளும் பிசிரோன் என்ப**
**என் உயிர் ஓம் புறனே**
**செல்வக் காலை நிற்பினும்**
**அல்லற் காலை நில்லவன் மன்னே"**

***(புறம் பா.192)***

என விளக்குகிறது. என் உயிரை தன்னுயிராக எண்ணிப் பேணும் உளம் கலந்த நட்பினன் என்று சான்றோர்களிடம் சோழன் பதில் அளித்தான். குகனும் இராமனை சந்திக்கும் முன்பே மனதால் அன்பு புண்டு ஒழுகினான்.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு"**

***(குறள் 788)***

துன்ப காலத்தில் ஒருவன் செய்யும் உதவி உண்மையான உதவியாகும.' அதுபோன்று குகன் கங்கையாற்றில் படகை செலுத்தி இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரையும் பாதுகாப்பாக மறுகரைக்கு கொண்டு போய்சேர்த்தான்.

**கைம்மாறு கருதாத பண்பு**

கங்கைக்கரையை கடந்து சென்றவுடன் குகன் இராமனின் அடி வணங்கி தானும் உடன் வருவதாக கூறினான். இராமனோ மறுத்து "நீ என் உயிர் போன்றவன் என் தம்பி உன் தம்பி சீதை உன் கொழுந்தி உன்னை

காணும் முன் நாங்கள் நான்கு பேர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம். இனி நாம் ஐவராக இருப்பபோம் என்றார். நீ இங்கிருந்து இங்கு உள்ள மக்களை காக்கும் பணியை திறம்பட செய்வாய்" என்று கூறி கானுறை காலம் முடிந்து வடக்கு நோக்கி வரும் காலத்தில் உன்னை வந்து சந்திப்பேன் என்றார். குகன் இராமனிடம் கொண்ட அன்பு கைம்மாறு கருதாத பண்பு ஆகும். எதையும் எதிர்பார்க்காமலேயே இராமனிடம் குகன் அன்பும் மரியாதையும் வைத்திருந்தான்.

## முடிவுரை

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்" என்ற குறளுக்கேற்ப குகன் குற்றமற்ற உள்ளம் உடையவனாக இருந்தான் இராமன் - குகன் சந்திப்பு இதிகாச வரலாற்றில் ஒரு ஒப்பற்ற நிகழ்வாகும். இன வேறுபாட்டை கடந்த சந்திப்பு ஆகும். பக்தி, நட்பு, அன்பு என்ற குறிக்கோளுடன் மட்டுமே குகன் இராமனை நெருங்கினான். குழந்தையின் அன்போடும் தொண்டனின் பக்தியோடும் இராமனிடம் உரிமை பாராட்டுவது மனம் கொள்ளத்தக்கதாக விளங்குவதை குகன் பாத்திரப்படைப்பினை கம்பர் கவிநயத்துடன் குகப்படலம் மூலம் புனைந்துள்ளார் என்றால் மிகையாகாது.

## துணைநூற்பட்டியல்

1. சிவசுப்பிரமணியன் திருக்குறள் தெளிவுரை கமர்சியஸ் பப்ளிகேசன்ஸ் திருத்தங்கல் சிவகாசி 626130.
2. பாலசுப்பிரமணியன் கு. வெ புறநானூறு, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 2004
3. கம்பராமயணம் (அயோத்தியா காண்டம் பகுதி 2) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 2010 இரண்டாம் பதிப்பு.